International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# அண்ணாவின் படைப்புகளில் திராவிட இயக்கக் கொள்கைகள்

**ஜெ. அர்ச்சனா**
முனைவர் பட்ட ஆய்வாளர்
**முனைவர் சு. இராசாராம்**
மூத்த பேராசிரியர் மற்றும் தலைவர், நெறியாளர், தமிழ்த்துறை
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி- 03

**முன்னுரை**

தமிழ்ச் சமுதாயத்தில் உருவாகிய ஒரு வரலாற்று முக்கியத்துவம் பொருந்திய சமூக அரசியல் இயக்கமாக, திராவிட இயக்கம் திகழ்கிறது. இவ்வியக்கத்தைத் தோற்றுவித்த தந்தை பெரியாரின் கொள்கையைப் பின்பற்றி பகுத்தறிவுக் கொள்கையாளராக வளர்ந்தவர் அறிஞர் அண்ணா. பிற்காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினைத் தோற்றுவித்து, தம் படைப்புகளான சிறுகதை, புதினம், நாடகம், கவிதை, கட்டுரை, கடித இலக்கியத்தின் வழி, திராவிடத்தை வளர்த்தெடுத்தார். அவ்வகையில் அண்ணாவின் இலக்கியப் படைப்புகளில் காணலாகும் திராவிட இயக்கக் கொள்கைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**திராவிடம்**

திராவிடம் என்ற சொல் தமிழில் இருந்து திரிந்து வந்ததாகும். எனவே தமிழம் என்பதன் திரிபே திராவிடம் ஆகும். "தமிழ் என்ற மொழிப் பெயரை அடிப்படையாகக் கொண்டு தமிழர் என்ற மக்கட் கூட்டத்தின் பெயரும் தமிழகம் அல்லது தமிழ்நாடு என்ற நாட்டின் பெயரும் தோன்றின. தமிழம் என்பது தமிழ் என்பதன் மறுபெயராகும். தமிழம் என்ற அந்தப் பெயரே 'தமிளம்', 'திரமிளம்', 'திரவிடம்' என்று படிப்படியாகத் திரிபுற்று இறுதியாக திராவிடம் என்றாயிற்று"[1] இவ்வாறாக திராவிடம் என்பதற்கு தமிழ் மொழியையும் தமிழர்கள் வாழும் பகுதியையும் குறிப்பிடப்படுகிறது. நாளடைவில் வரலாற்றாசிரியர்களும் அறிஞர் பெருமக்களாலும் திராவிடம் என்பதற்கு தமிழையும் தமிழிலிருந்து பிரிந்த கிளைமொழிகளையும் அந்த மொழிகள் வழங்கும் இடத்தைக் குறிப்பதற்கும் உரிய ஒரு சொல்லாக பயன்படுத்தத் தலைப்பட்டனர். "தமிழர்–தெலுங்கர்–கன்னடியர்–மலையாளிகள்-துளுவர் ஆகிய மக்களை ஒன்று சேர்த்து குறிப்பதற்குரிய சொல்லாகத் திராவிடர் என்ற சொல்லைப் பயன்படுத்தத் தொடங்கினர்."[2] ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த வடமொழி ஆசிரியரான குமரிலப்பட்டர் திராவிட என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். இவ்வாறாக திராவிடம் என்ற சொல்லானது தமிழைக் குறிக்கும் சொல்லாகவும் திராவிட மொழிகள் எல்லாவற்றையும் சேர்த்துக் குறிக்கும் சொல்லாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**பகுத்தறிவுக் கொள்கை**

அறிஞர் அண்ணா பெரியாரின் தொண்டராக விளங்கி, தமது ஒப்பற்ற இலக்கியங்கள் வாயிலாகப் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பினார். பெரியாரின் குடியரசு இதழ், அண்ணாவின் திராவிட நாடு இதழ்களில் அண்ணா எழுதிய கட்டுரைகள் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பறைசாற்றக் கூடியனவாக அமைந்துள்ளன. இச்சமுதாயத்தில் மக்கள் அனைவரும் பகுத்தறிவோடு வாழ்வதற்கும், செயல்

படுவதற்கும் அண்ணா பல்வேறு கொள்கை களைத் தோற்றுவித்தார். சமுதாய முன்னேற்றத் தை நாட்டில் ஏற்படுத்த மக்கள் அனைவரும் பகுத்தறிவோடு வாழ்ந்தால் தான் முடியும் என அண்ணா கருதினார்.

சமுதாயத் தொண்டர்கள் பகுத்தறிவுவாதிகளாக இருந்தால்தான் சமுதாயம் மறுமலர்ச்சி அடைய ஏதுவாக இருக்கும் என்பதில் முழுநம்பிக்கை கொண்டிருந்த அண்ணா, பெரியார் கூறிய கடவுள் மறுப்புக் கொள்கை மட்டுமே பகுத்தறிவு எனக் கொள்ளாது, எல்லாத் துறைகளிலும் பகுத்தறிவைச் செலுத்த வேண்டும் என்பதை வற்புறுத்தினார். அதனால் தான் கடவுள் இல்லை என்ற பெரியாரின் கருத்திலிருந்து சிறுது மாறுபட்டு ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற திருமூலரின் கொள்கையை அண்ணா ஏற்றுக்கொண்டு செயல்பட்டார்.

அண்ணா வலியுறுத்திய கொள்கைகளில் அவரின் படைப்பான, சந்திரோதயம் என்னும் நாடகத்தில் "பண்டாரங்களைப் பிடிக்கும்; ஆனால் கடவுளின் பெயராலும் மதத்தின் பெயராலும் அளவுக்கு மீறிய சொத்துக்களை மடாலயம் என்ற பெயரால் அனுபவித்து வரும் அயோக்கியர்களைக் கண்டால் பிடிக்காது"[3] எனப் பண்டாரங்கள் குறித்த தனது பார்வையைத் துரைராசு என்ற பாத்திரத்தின் வழியாக அண்ணா வெளிப்படுத்தியுள்ளார்.

பெண்கள் வெறும் புத்தகத்தையும் கதைகளையும் மட்டுமே படித்து அதனால் கிடைக்கக் கூடிய அறிவு மட்டுமே இச்சமூகத்திற்குப் போதாது அதோடு பகுத்தறிவுச் சிந்தனைகளையும் அனைத்து மக்களும் பெற வேண்டும் என்று சுட்டினார். பாமா விஜயம் என்னும் சிறுகதையில், "சரசாவின் அழகு வளர்ந்து கொண்டே வந்தது போலவே அறிவும் வளர்ந்து கொண்டே வந்ததது. அறிவு என்றால் அல்லி அரசாணி மாலையும் நல்லதங்காள் புலம்பலும், அந்தகனை மணந்த அற்புத வள்ளியின் கதையும் படிப்பது"[4] என்பதோடு மட்டுமல்லாமல் தங்கள் வாழ்வின் அனுபவத்தின் மூலம் வாழ்க்கைக்குத் தேவையான எண்ண வெளிப்பாட்டைப் பகுத்து ஆராயக் கூடிய சிந்தனைப் போக்கை பாமா விஜயம் என்ற சிறுகதையில் சரசா என்னும் கதை மாந்தர் வாயிலாகப் பகுத்தறிவு என்பது படிப்பது மட்டுமல்ல நடைமுறை வாழ்க்கையில் கணவனை இழந்த பெண்ணுக்கு வரும் இடர்பாடுகள் என்னவென்று பகுத்து ஆராய்ந்து அப்பெண்ணுக்கு மறுமணம் செய்து வைக்கக் கூடிய செயலைப் பகுத்தறிவுக் கொள்கையாக சரசா என்னும் மாந்தர் வழியாக பெண்கள் பகுத்தறிவு பெற்றவராக இருத்தல் வேண்டும் என்கிறார் அண்ணா.

**பெண்ணியக் கொள்கை**

அண்ணாவின் படைப்புகள் பெண்கள் மீது அவர் கொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்துவன வாகவும் பெண்களின் உயரிய குணநலன்களை எடுத்துரைப்பனவாகவும் உள்ளன. பெண்களிடம் இருக்க வேண்டிய பண்புகளாக அண்ணா கருதுவதை,

**"பெண்கள் பகுத்தறிவு உடையவர்களாக இருத்தல் வேண்டும்.**

**பெண்கள் வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.**

**பெண்கள் பண ஆசை இல்லாமல் வாழ்தல் வேண்டும்.**

**பெண்கள் கலப்பு மணத்தை ஆதரிக்க வேண்டும்.**

**பெண்கள் சமுதாய அக்கறையும் சீர்திருத்த நோக்கும் உடையவர்களாகத் திகழ்தல் வேண்டும்.**

**பெண்கள் துணிச்சலும் தன்னம்பிக்கை கொண்டு தடைகளை எதிர்த்து வெல்ல வேண்டும்.**

**பெண்கள் மனிதநேயம் உள்ளவர்களாக விளங்க வேண்டும்"**[5]. என்பர்.

வேலைக்காரி என்னும் நாடகத்தில் "தாய்மார்களே சகோதரிகளே பெண்களின் விடுதலைக்காக நான் எப்பொழுதும் பாடுபடுவேன். நாம் எல்லோரும் சமம். எல்லோரும் ஒன்று என்ற முறைப்படி தாழ்ந்த நிலையில் உள்ளவர்களைத் தகுந்த நிலையில் உயர்த்துவதற்கு நான் எப்பொழுதும் தொண்டு செய்வேன்"[6] என சரசா என்ற பெண்ணின் வழியாகப் பெண்விடுதலை குறித்த அண்ணாவின் பெண்ணியக் கொள்கையை அறிய முடிகின்றது.

பெண்கள் வாழ்வின் முன்னேற்றம் குறித்த தனது கொள்கையை விவரிக்கும் அண்ணா "நிலவுக்கு ஒளிதரும் சூரியன் இயற்கை நியதிப்படி அளவும் காலமுமறிந்து ஒளி தருகிறான். பெண்ணுக்கு வாழ்வு அமைக்கும் ஆடவனோ எந்த நீதிக்கும் கட்டுப்பட்டவனல்ல அவன் இஷ்டம் இது மாறவேண்டுமானால் பெண்களுக்குத் தங்கள் வாழ்வைத் தாங்களே அமைத்துக் கொள்ளக் கூடிய திறமை, வசதி, உரிமை ஏற்பட வேண்டும்"[7] என்கிறார். மேலும் இவற்றால் பெண் விடுதலையும் பெண்களின் முன்னேற்றமும் அண்ணாவின் பெண்ணியக் கொள்கைகளாக விளங்குவது புலனாகும்.

### அரசியல் கொள்கை

பல்வேறுபட்ட இனமக்களை உள்ளடக்கிய பகுதியே நாடு. அந்நாட்டில் சமுதாயம், பொருளாதாரம், இனம், சாதி, சமயம் என்ற வேறுபாடுகள் மறையவில்லை. ஆட்சியாளர்கள் நேர்மையான நெறியை மறந்துவிட்டு வசதியான வாழ்க்கையை மேற்கொள்வதாக நாட்டு மக்கள் நலனில் கவனம் செலுத்துவதில்லை. அதனால் நாட்டில் உள்ள ஏழைகளின் வாழ்வு நலிந்தது ஏற்றத்தாழ்வுகள் அதிகமாயின.

நாட்டின் வடபகுதி வளமடைந்து தென்பகுதி தளர்வடைந்தது. இத்தகைய நிலைமைக்கு நடுநிலைமையற்ற காங்கிரசு ஆட்சியே காரணம் என்று திராவிடத் தலைவர்கள் கருதினர். அவர்களுள் அண்ணா குறிப்பிடத்தக்கவர். தென்பகுதி மக்களின் நலிவிற்குக் காரணமான இனநலக் காங்கிரசு ஆட்சியை அகற்றும் எண்ணம் கொண்டு முறையான மக்களாட்சி நாட்டில் நடைபெற வேண்டுமென்பதற்கு அண்ணா முழுமூச்சாய்ச் செயலாற்றினார். வடநாட்டவரின் வல்லாண்மை அரசியல், திராவிடர் களை வடவருக்குப் பொருளாதார அடிமைகளாக மாற்றிடும் நிலையைக் காணப் பெறாதவரான அண்ணா, வடநாட்டின் கீழும் வடவர்களின் வல்லாண்மை ஆட்சியின் கீழும் அடிமை உணர்வோடு வாழ்ந்து வரும் திராவிடத் தமிழ் மக்களின் உணர்வைத் தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிட்டார். அண்ணாவின் அரசியல் கருத்துகளும் நெறிமுறை களும் காங்கிரசை அதிகமாகச் சாடின.

அண்ணாவின் படைப்புகளில் தமிழகத்தில் காங்கிரசை ஆட்சியில் இருந்து அகற்றுவது அல்லது காங்கிரசு எதிர்ப்பு ஆகும். மக்கள் தான் ஆட்சியாளர்களை ஆள வேண்டும் என்ற கொள்கை வலியுறுத்தப்பட்டுள்ளது. இக் கொள்கையை அண்ணாவின் படைப்பான 'நான் மனிதனானேன்' என்னும் சிறுகதையில் "இரண்டே முறைகள் தான் உள்ளன உலகையாள்வதற்கு ஒன்று நாம் மக்களை ஆள்வது, மற்றொன்று மக்கள் நம்மை ஆள்வது. நீர் சொல்லும் முறைப்படி காரியம் செய்தால் மக்கள் நம்மை ஆளத் தொடங்குவர் மாளிகையும் இராது, அரண்மனையும் இராது."[8] என்னும் கூற்று வெளிப்படுத்தும்.

"அரசாங்கத்தைப் பற்றிய தனது பார்வையை அண்ணா ஒரு நேர்மையான அரசாங்கம் மக்களுக்குச் செய்து தீர வேண்டிய கடமைகளை உதறித் தள்ளிவிட்டு, மக்களை மட்டும் அரசாங்கத்தைப் பலப்படுத்தும் பணியில் அவர்களுக்குள்ள கடமையை முன்தள்ளிப் பேசுவது, மாசடைந்துள்ள மனத்தின் மதிப்பற்ற வார்த்தைகள் என்றுதான் கூறவேண்டும். மக்கள் நலம் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டிருக்கும் அரசாங்கத்தை நடத்தும் எந்த ஒரு நபரும் தான் தவறிய கடமையை, தான் மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணியை மறந்து மன்னித்துவிட்டு தாங்கள் தங்கள் கடமையை மட்டும் செய்ய வேண்டுமென்று மக்களிடம் எதிர்பார்ப்பது கூடாது; நடவாது என்கிறார்"[9].

அன்றைய காலம் முதல் இன்றைய காலம் வரை அரசியல் உலகில் நாட்டை ஆட்சி செய்பவர் களும் எதிர்ப்பவர்களும் மக்களிடம் தனது ஆட்சி பதவிக்கு வந்தால் நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் நல்லது செய்வேன் என்றும், மக்களுக்காகவே தனது ஆட்சி செயல்படும் என்றும் மக்களின் நலனில் ஆர்வம் கொண்ட வர்கள் போல் செயல்படுவார்கள். தனது ஆட்சி வரவேண்டும் என்பதற்காகவே அரசியல்வாதிகள் சலுகைகள் செய்வதாகவும் சட்டங்கள் பலவற்றை நிறைவேற்றுவதாகவும் வாக்குக் கொடுப்பார்கள். மக்களின் வறுமையைப் போக்க மக்கள் மக்களாக வாழ வேண்டும் என்ற கொள்கை ஆட்சியாளர்களுக்கு வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார் அண்ணா.

### மொழிக் கொள்கை

மொழி என்பது, கருத்துப் பரிமாற்றம், சமூக அடையாளம், கலாச்சாரத்தின் வெளிப்பாடு, சிந்தனையின் கருவி எனப்படும். ஒரு மனிதன் தன்னுடைய எண்ணங்களையும், கருத்துக்களை யும், தகவல்களையும் மற்றவர்களுக்கு வெளிப் படுத்தப் பயன்படுத்தப்படும் ஒரு கருவியாகும். அம்மொழியானது ஓர் இனத்தின் அடையாள மாகவும் அவ்வினத்தவர்களின் கலாச்சாரத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகவும் விளங்குகிறது.

"மொழி என்பது மனிதனுக்கு இயற்கையாக அமைந்தது. அம்மொழியை மனிதன் தானே அமைத்துக் கொண்ட கருவியாகும். மனிதர்கள் இன்ன ஒலிக்கு அல்லது இன்ன பொருள் என்று முடிவு செய்வதன் மூலம் மொழி உண்ணாயிற்று என்று கலைக்களஞ்சியம் மொழிக்கு விளக்கம் தருகின்றது."[10]

"மனிதன் பிறருடன் தொடர்பு கொள்வதற்கான செயற்பாடுகளில் சிறப்பான ஒருவகைதான் மொழி"[11] என்று ஆங்கில மொழியியல் அறிஞர் பிட்கார்பர் தெரிவிக்கின்றார். எனவே மனிதன் தன்னுடைய கருத்தை வெளிப்படுத்துவதற்கு கையாளும் கருவியே மொழி என்பது மொழியியல் அறிஞர்களின் கருத்தாகும்.

"தட்ப வெட்ப நிலைக்கு ஏற்ப மொழி உருவாக்கப்படுகிறது என்னும் கருத்துடையவர் அண்ணா. அவ்வாறு உருவாக்கப்பட்ட மொழியை வெறும் கருவியாகக் கருதாமல் மொழியன்றோ ஓர் இனத்தின் பண்பையும் நாட்டின் வரலாற்றை யும் எடுத்துக்காட்டி வீரம் ஊட்ட வல்ல தாய்"[12] என்று போற்றுகிறார். அவ்வகையில் மொழி ஓர் இனத்தின் அடையாளம் என்பது அண்ணாவின் மொழிக் கொள்கை என்பது விளங்கும்.

### அறிஞர் அண்ணாவின் மொழிப்பற்று

மொழிப்பற்று என்பது மொழியின் மீது மக்கள் கொண்டிருக்கும் பற்றும், ஆர்வமும், நேசமும் ஆகும். இது ஒரு மொழியின் பண்பாடு, இலக்கியம், வரலாறு மற்றும் அதன் வளர்ச்சி மீது அக்கறை காட்டுவதாகும். மொழிப்பற்று ஒரு மொழியைப் பாதுகாப்பதிலும் அதன் பெருமைகளை உலகறியச் செய்வதிலும், அதன் வளர்ச்சிக்கு உதவுவதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. அண்ணாவிற்கு மொழிப்பற்று ஏற்படக் காரணம் அவர் கல்வி பயின்ற பச்சையப்பன் கல்லூரி காலத் தமிழ்ப் பேராசிரியர்கள் கந்தசாமி மற்றும் திருநாவுக்கரசு என்றே கூறலாம். "ஒருவன் தன்னுடைய தாய்மொழியின் மீது பற்றுக் கொள்வது இயற்கையாக அமைந்த ஒன்றாகும். யார் தடுத்தாலும் யார் மறுத்தாலும் தாய்மொழிப் பற்று குன்றிவிடாது பொங்கித்தான் வழியும் இயற்கையாகத் தோன்றும் மொழிப்பற்றினை வளர்ப்பதற்குத் தூண்டுகோல் தேவைப்படும்."[13]

தமிழிசைப் போராட்ட மாநாட்டில் பேரறிஞர் அண்ணா உரையாற்றும் போது "தாய்மொழியே இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்ற முப்பிரிவை உடையது. இவற்றில் இசை என்பது இயற்றமிழிலும் உண்டு. நாடகத்தமிழிலும் உண்டு. தமிழே இசை உருவாக அமைந்த ஒரு மொழிதான் இசையே தமிழில்தான் முதன்முதலில் தோன்றியது என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு, இசைவாணர்களின் முடிவும் இதுதான் இத்தகைய இசைத்தமிழ் இடைக்காலத்தில் பல்வேறு காரணங்களால் குன்றிவிட்டது. பொருள் விளங்காத பிறமொழிப் பாடல்களை இசைவாணர் கள் பாடுவது தமிழுக்கும் தமிழர்களுக்கும் இழுக்குத் தேடும் முயற்சியாகும்"[14] எனப் பேசியது அறிஞர் அண்ணா தமிழ் மொழியின் மீது கொண்டுள்ள பற்றினை வெளிப்படுத்துகிறது.

### சாதி எதிப்புக் கொள்கை

மக்கள் சமுதாய முன்னேற்றத்திற்குப் பெரும் தடையாக விளங்குவனவற்றுள் சாதி குறிப்பிடத் தக்கது. சாதியினால் ஏற்படும் பாதிப்புகள் மற்ற நாடுகளை விட இந்தியாவில் அதிகமாகக் காணப்படுகின்றன. சாதியானது மக்களை மண்டியிட வைக்கும் ஆற்றலும் ஆளுமையும் நிறைந்தது. திராவிடச் சமுதாயம் சாதித் தளையிலிருந்து மீள வேண்டும் என்ற நோக்கில் படைப்புகளை உருவாக்கியவர் அண்ணா. ஆரியர்களின் தன்னலப்போக்கை எடுத்து விளக்கவும் சமுதாயத்தை ஆட்டிப் படைக்கும் சாதிகளை வேரோடு களைவதற்கும் தம் படைப்புகளை பயன்படுத்திக் கொண்டார். அறிஞர் அண்ணா பார்ப்பனர்களை எதிர்க்கவில்லை. பார்ப்பனியத்தை மட்டும் தான் எதிர்க்கிறார். "எட்டிப் போடா சூத்திரப்பயலே என்ற ஐயா பேச்சும் ஆரியம் தான்! படையாட்சிக்கு இவ்வளவு உயர்வா? என்று கேட்கும் கேள்வியும் ஆரியம் தான்! மறவர் முன்பு மட்டு மரியாதையோடு நட! தேவர் வருகிறார் எழுந்து நில்! நாடார் ஓடிவா! செட்டியார் கேட்கிறார் தட்டாமல் கொடு! என்று ஆரியம் பார்ப்பனியம் பலப்பல முறைகளில்"[15] என விளக்கம் தருகிறார். அண்ணாவின் நோக்கம் பார்ப்பனியத்தை எதிர்ப்பது மட்டுமல்ல, அடிமைத்தனம், தீண்டாமை போன்றவை எந்த உருவில் இருந்தாலும் அதனை எதிர்க்கும் விதமாக அண்ணாவின் படைப்புகள் அமைந்து உள்ளன.

சாதியானது திருமணம் செய்து கொள்வதற்குத் தடையாகவும், மக்களை அடிமையாக நடத்து வதற்குப் பக்கபலமாகவும் இருந்து சமுதாயத்தில் பல்வேறு சிக்கல்களை உருவாக்குகின்றது. "சாதி சனியனைக் கண்டு மிரண்ட எத்தனையோ பேர் தமக்கு உகந்தவரை மணம் புரிந்து கொள்ளாது. அவர்கள் வாழ்வைக் கெடுத்து அவர்களை விபச்சாரிகளாக்கினர்.[16] எனச் சாதியால் உருவாகும் பிரச்சனையைக் கூறி அவற்றை இச்சமுதாயத்தை விட்டு அகற்ற வேண்டும் என்ற தம் கொள்கையை விளக்குகிறார்.

நாம் அனைவரும் திராவிடர் நம்மில் யாதொரு பாகுபாடும் இல்லை என்று கூறி வருணாசிரம தர்மத்தை ஒழிக்கப் பாடுபட்டவர் அறிஞர் அண்ணா. சாதியின் பெயரால் விரோதமும், காதல் திருமணத்திற்குத் தடைகளை ஏற்படுத்தும் சமுதாய அமைப்பு முறையை அண்ணாவின் 'வேலைக்காரி' நாடகத்தில் காணமுடிகிறது. சிக்கலை உருவாக்குவோர் மனம் திருந்தி இந்நாடகத்தின் இறுதியில் "பணத்திமிரும் சாதித் திமிரும் ஒழிய வேண்டும் என்றும், 'ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றும் நாட்டு மக்களுக்கு உரைப்போம்"[17] இவற்றின் மூலம் சாதி ஒழிப்புக் கொள்கை முழக்கத்தைக் காணமுடிகிறது.

**முடிவுரை**

சமுதாயத்துறையிலே முன்னேற்றம், பொருளாதாரத் துறையிலே மறுமலர்ச்சி, சமதர்மக் குறிக்கோள், விடுதலை போன்ற கொள்கைகளோடு செயல்பட்டு வந்த பெரியாரின் வழியில் அண்ணாவும் செயல்பட்டு வந்தார். இயக்கத்தின் கொள்கைகளையும், தனது கொள்கைகளையும் நாட்டிற்கு எடுத்துச் சொல்வதே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தார். பெண்விடுதலையை முதன்மை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு, பெண்களுக்கு இச்சமுதாயம் முழுச் சுதந்திரத்தை அளிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி வந்தார்.

மூடப்பழக்கவழக்கத்திலிருந்து மக்களை விடுவிக்கும் விதத்தில் சோதிடம், கோயில்களில் நடைபெறும் சடங்கு முறை, புராணக்கதை, போலிச்சாமியார்கள் போன்றவற்றை கடுமையாக எதிர்த்தும், மேலும் அதன்மூலம் மக்களுக்கு பகுத்தறிவுச் சிந்தனையை வளர்த்து மூடப்பழக்க வழக்கத்திற்கு அடிமையாகாத நிலையை உருவாக்க முயல்கின்றார்.

அண்ணாவின் அரசியல் தொடர்பான படைப்புகள் தமிழ்நாட்டு மக்களுக்கு தமிழ் மொழி உணர்வுப் பற்றை வலியுறுத்துகின்றது. மேலும் தனது படைப்புகள் மூலமாக மக்களுக்கு தமிழ் மொழி மற்றும் இன உணர்வை வளர்த்தவர்.

அன்றைய காலம் முதல் இன்றைய காலம் வரை சாதி என்னும் கட்டமைப்பு இச்சமூகத்தில் இருந்து கொண்டு தான் இருக்கிறது. சாதி என்னும் கட்டமைப்பிலிருந்து மக்கள் விடுபட வேண்டும் என்ற சாதி எதிர்ப்புக் கொள்கையை அண்ணா தன் படைப்பின் மூலம் வெளிப் படுத்தியுள்ளதைக் காணமுடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. இரா.நெடுஞ்செழியன், திராவிட இயக்க வரலாறு, ப.100
2. மேலது, ப.100
3. சி.என்.அண்ணாதுரை, பேரறிஞர் அண்ணாவின் நாடகங்கள் தொகுதி-1, ப.43
4. எஸ்.கௌமாரீஸ்வரி (ப.ஆ), அறிஞர் அண்ணாவின் சிறுகதைக் களஞ்சியம், ப.8
5. பாவரசன், சமுதாயவியல் நோக்கில் அறிஞர் அண்ணாவின் படைப்புகள், ப.205
6. அண்ணா, வேலைக்காரி, ப.19
7. அண்ணா, ரங்கோன் ராதா, ப.134
8. அண்ணா பரிமளம் (தொ.ஆ), அறிஞர் அண்ணாவின் சிறுகதை, ப.337
9. பாவரசன், சமுதாயவியல் நோக்கில் அறிஞர் அண்ணாவின் படைப்புகள், பக்.213-214
10. சு.வைத்தீஸ்வரன், அறிஞர் அண்ணாவின் படைப்புகளில், திராவிட இயக்கக் கொள்கைகள், ப.54
11. மேலது, ப.54
12. மேலது, ப.55
13. கோ.இளங்கோவன், (தொ.ஆ), அண்ணாவும் அழகுத்தமிழும், ப.18
14. இரா.நெடுஞ்செழியன், திராவிட இயக்க வரலாறு, ப.782
15. அண்ணா, தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள், தொகுதி -1, பக்,224-225
16. அண்ணா பரிமளம் (தொ.ஆ), அண்ணாவின் சிறுகதை, ப.36
17. அண்ணா, வேலைக்காரி, ப.96

**துணைநூற்பட்டியல்**

1. அறிஞர் அண்ணா, பூம்புகார் பதிப்பகம், 63 பிரகாசம் சாலை, சென்னை – 600108, இரண்டாம் பதிப்பு 2000
2. அறிஞர் அண்ணா, வேலைக்காரி, பூம்புகார் பதிப்பகம், 63 பிரகாசம் சாலை, சென்னை – 600108, ஏழாம் பதிப்பு 2023
3. அறிஞர் அண்ணா, ரங்கோன் ராதா, பூம்புகார் பதிப்பகம், 63 பிரகாசம் சாலை, சென்னை – 600108, ஏழாம் பதிப்பு 2023
4. அறிஞர் அண்ணா, தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள், பூம்புகார் பதிப்பகம், 63 பிரகாசம் சாலை, சென்னை – 600108, இரண்டாம் பதிப்பு 2019
5. நெடுஞ்செழியன். இரா – திராவிட இயக்க வரலாறு, நன்னூல் பதிப்பகம், மணலி திருத்துறைப்பூண்டி – 610203, பதிப்பு – 2022
6. பாவரசன், சமுதாயவியல் நோக்கில் அறிஞர் அண்ணாவின் படைப்புகள், முனைவர்பட்ட ஆய்வாளர், அழகப்பா பல்கலைக்கழகம் காரைக்குடி, ஆண்டு-2017